**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாக்களுள் நெகிழ்வான வடிவுடைய 'பா' எது?
2. விரிச்சி கேட்டல் என்பதன் பொருள் என்ன?
3. கோக்குளமுற்றனார் என்னும் புலவரின் ஊர் எது?
4. கோப்பெருஞ்சோழனின் கனவு பற்றிய பாடல் யாருடைய கனவுக்கோட்பாட்டோடு ஒத்துள்ளது?
5. 'சிறுவெண்காக்கைப் பத்து' இடம்பெற்றுள்ள திணை எது?
6. 'வெறிப்பது' என்பதில் 'வெறி' என்ற சொல்லின் பொருண்மைகளைச் சுட்டுக.
7. அகநானூற்றைத் தொகுப்பித்தவர் யார்?
8. நல்லியக்கோடன் ஆண்ட நாட்டின் பெயர் என்ன?
9. பெருமாவிலங்கைத் தலைவன் என்று சிறப்பிக்கப்படுபவன் யார்?
10. சிறுபாணாற்றுப்படையில் யானையின் துதிக்கை எதற்கு உவமையாகச் சொல்லப்பட்டது?
11. யாழின் முக்கிய உறுப்புகள் யாவை?
12. சங்ககாலத் தமிழக வரலாற்றை எழுதுவதற்கு ஆதாரமாக இருந்த நூல் எது?
13. முதிரத்துக் கிழவன் என அழைக்கப்படுபவன் யார்?
14. செங்கை மறவர் என்ற பாடலின் துறை என்ன?
15. பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்து எந்த மன்னனைப் பற்றியது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. 'புணரின் புணராது பொருளே' எனத் தொடங்கும் பாடலின் கருத்து யாது?
2. 'இறைச்சி' என்பதன் பொருளைக் குறுந்தொகைப் பாடலுடன் பொருத்துக.
3. ஒருவழித் தணத்தல் – குறிப்பு வரைக.
4. மருட்கை என்னும் மெய்ப்பாட்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. கடையேழு வள்ளல்களின் சிறப்புகளை எழுதுக.
6. எயிற்பட்டினத்தின் பேராற்றலைப் புலப்படுத்துக.
7. நலங்கிள்ளியின் பேராற்றலைப் புலப்படுத்துக.
8. மாக்கோதையின் மாண்பினை எடுத்துரைக்க.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உவமையால் பெயர்பெற்ற புலவர்களின் கவித்திறம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள உள்ளுரைறயைத் தொகுத்தெழுதுக.

2. (அ) அகநானூற்றில் இடம்பெற்றுள்ள அகப்பொருள் கோட்பாட்டினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பாணர்களின் வறுமைகநிலையைச் சிறுபாணாற்றுப் படை சித்தரித்துள்ள விதத்தைக் கட்டுரை வடிவில் எழுதுக.

3. (அ) புறநானூற்றில் காணப்படும் நிலையாமை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடிய திறம் குறித்து விரித்துரைக்க.

****